உயிரியல்

கணம் கோடேற்றாவின்
சிறப்பான இயல்புகளை பயன்படுத்தி
அங்கிகளை இனங்காண்பர்.



e தக்சலாவ™
கல்விக்கூடம்
The National e-learning Portal for The General Education
Start Your Learning Journey with e-thaksalawa

தேர்ச்சி 3.2.0: அங்கிகளின் பல்வகைமையை தேடியாய்வர்

தேர்ச்சி மட்டம் 3.2.7: கணம் கோடேற்றாவின் சிறப்பான இயல்புகளைப் பயன்படுத்தி அங்கிகளை இனங்காண்பர்

கணம் கோடேற்றா
Phylum Chordata



முன் முளையிலிருந்து பின் முளை வரை நீண்ட வளையக்கூடிய கோலுருவான முதுகு நாண் சமிபாட்டுக் குழாயிற்கும் நரம்பு நாணிற்கும் இடையில் காணப்படும். இது முளைய நிலை வரையாவது ஆதாரத்தை வழங்கும்.

முதுகு நாண் முதுகுப்புறமாக தனியான முதுகுப்புற கோறையான நரம்பு நாண் உண்டு.

எல்லா முளையநிலை கோடேற்றாக்களிலும் தொண்டையின் இரு புறத்திலும் சோடிகளாக அமைந்த உடலக/பூப்பிளவுகள் காணப்படும். இவை உடலின் வெளிப்புறம் திறந்திருக்கும். தரைவாழ்க்கைக்குரிய கோடேற்றாக்களில் இப்பூப்பிளவுகள் இழக்கப்பட்டு எனினும் நீர்வாழ்க்கைக்குரிய நிறைவுடலிகள், தரைவாழ் கோடேற்றா குடம்பிகளில் சுவாச கட்டமைப்பாகக் காணப்படும்.



எல்லாக் கோடேற்றாக்களின் முளைய நிலையில் குதத்திலிருந்து பின் முளை வரை தசை செறிந்த வால் காணப்படும். சில தரை வாழ் நிறைவுடலிகளில் ஒடுக்கப்பட்டது.

தொகுப்பு :- திருமதி.A.தவரஞ்சித் ஆசிரியர் - உயிரியல் (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

Class Chondrichthyes

1. யாவும் நீர் வாழ்க்கைக்கு உரியவை.
2. கசியிழையத்தால் ஆக்கப்பட்ட வன்கூடு உடையவை.
3. இடப்பெயர்ச்சிக்கு செட்டைகள் காணப்படும்.
4. வாற்செட்டை இதர வாலுக்குரியது. (மேற்சோணை நீண்டது)
5. பூமூடியினால் சூழப்படாத பூக்கள்.
6. உடல் தட்டுருச் செதில்களால் போர்க்கப்பட்டது.
7. அகக்கருக்கட்டல், சில சூற்பிள்ளை ஈணுபவை ஏனையவை முட்டை இடுகின்றவை அல்லது பிள்ளை ஈணுபவை.
8. இனப்பெருக்கச் சுவடு, கழித்தல் கான் சமிபாட்டு சுவடு வெறுமையான பொதுவான கழியறைக்குள் திறக்கும் இது வெளிப்புறமாக தனியான துவாரத்தினூடு வெளித்திறக்கும்.



சுறா (Shark)



திருக்கை (Skates)

தொகுப்பு :- திருமதி.A.தவரஞ்சித் ஆசிரியர் - உயிரியல் (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

Class Osteichthyes

சிறப்பியல்புகள்

⇒ யாவும் நீர் வாழ்க்கைக்குரியவை.

⇒ என்பினால் ஆன வன்கூட்டைக் கொண்டவை.

⇒ பூக்கள் என்பு மடலால் சூழப்பட்டது.

⇒ நீந்தும் போது தோற்பை நீரில் மிதப்பதைக் கட்டுப்படுத்தும்.

⇒ வாற்செட்டை ஓரின வாலுக்குரியது.

⇒ உடல் தட்டையான என்பு செதிலால் மூடப்பட்டது. இவை சீப்புரு/ வட்டவுருச் செதில்கள்.

⇒ அனேகமானவை புறக்கருக்கட்டல். சில அகக்கருக்கட்டல்.

⇒ அனேகமானவை முட்டை இடுபவை.



Carp



Tuna



Carangid



தொகுப்பு :- திருமதி.A.தவரஞ்சித் ஆசிரியர் - உயிரியல் (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

Class Amphibia

சிறப்பியல்புகள்

⇒ முதலில் தரைக்கு குடிபெயர்ந்த விலங்குகள் எனினும் வாழ்க்கை வட்டத்தை பூர்த்தி செய்ய நீர் தேவைப்படுபவை.

⇒ நீரிலும் நிலத்திலும் வாழ்பவை.

⇒ தரையில்/ நன்னீரில் மட்டும் வாழ்பவை. கடல் வாழ் இனங்கள் இல்லை.

⇒ அவயங்களைக் கொண்ட முதல் இனமாகும். அவயங்களின் உதவியுடன் உடல் தரையில் இருந்து உயர்த்தப்பட்டு தரைச்சூழலில் இடம்பெயர உதவும்.

⇒ சூழல் வெப்ப குருதி விலங்குகள். சூழல் வெப்பநிலையின் மாற்றங்களிற்கு ஏற்ப உடல் வெப்பநிலை மாறும். அனுசேபத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருக்கும்.

⇒ சூழல் மாற்றங்களிற்கு உணர்திறன் மிக்க மெல்லிய ஈரலிப்பான தோல் உடலை மூடி காணப்படும். செதில்கள் இல்லை.

⇒ சில அவையமற்றவை. சில நாற்பாதமுடையவை.

⇒ சிமிட்டு மென்சவ்வால் மூடப்பட்ட கண் உண்டு.

⇒ கண்ணிற்கு பின்னாக செவிப்பறை மென்சவ்வு காணப்படும்.

⇒ அனேகமான அம்பீபியாக்கள் புறக்கருக்கட்டலை காட்டும். ஓடற்ற முட்டை இடுபவை.



தேரை (Toad)



தவளை Frog



இத்தியோபிஸ் Ichthyopis

தொகுப்பு :- திருமதி.A.தவரஞ்சித் ஆசிரியர் - உயிரியல் (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

ரெப்ரீலியாக்கள் Class Reptilia

1. தரை வாழ்வுக்கு பூரணமாக சிறப்படைந்த முதல் விலங்குக் கூட்டம்.
2. தரையில் இடம் பெயருவதற்கு அவயங்கள், உகிர்கள் கொண்டவை
3. தரையில் நீர்க்காப்பிற்காக உடல் கெரட்டினேற்றப்பட்ட செதில்களால் மூடப்பட்டது.
4. காற்றை சுவாசிக்க நுரையீரல் கொண்டவை.
5. சூழல் குருதி வெப்பநிலைக்குரியவை
6. தரை, நீருக்குரிய வாழிடங்களில் வாழும்.
7. அகக்கருக்கட்டல்.
8. ஓடுடைய முட்டைகள் தரையில் இடுபவை, சில பாம்புகள், பல்லிகள், பிள்ளையீணுபவை



ஓணான் Lizard



பாம்பு Snake



ஆமை Turtle



முதலை Crocodile

தொகுப்பு :- திருமதி.A.தவரஞ்சித் ஆசிரியர் - உயிரியல் (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

Class Aves

சிறப்பியல்புகள்

⇒ நாடிக்குரிய இசைவாக்கங்களைக் கொண்ட முதல் விலங்குகள்.

⇒ உடல் கெரட்டின் ஏற்றப்பட்ட இறகுகளால் மூடப்பட்டது.

⇒ முன்னவையங்கள் பறத்தலுக்காக மாற்றப்பட்டவை.

⇒ பறத்தலுக்கு உதவியாக பல இசைவுடையவை

- இலேசான உடல்
- சிறகுகள்
- காற்றுக் குழிகள் கொண்ட என்புகள்.
- உயர் அனுசேபம்.
- உடற்பருமன் கட்டுப்படுத்தப்பட்டது.

⇒ அலகு கொண்டவை எனினும் பற்கள் அற்றவை.

⇒ இளஞ் சூட்டு குருதி வெப்பநிலைக்கு உரியவை.

⇒ பறவைகள் நிறப்பார்வை கொண்டவை அத்துடன் உயர்ந்த கண்பார்வை உடையவை.

⇒ அகக்கருக்கட்டல்.

⇒ ஓடுடைய முட்டை இடுபவை.



காகம் Crow



கிளி Parrot



கழுகு Eagle

Copyright www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.A.தவரஞ்சித் ஆசிரியர் - உயிரியல் (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்)

கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

Class Mammalia

சிறப்பியல்புகள்

⇒ பாற்சுரப்பியினால் உற்பத்தி செய்யப்படும் பாலை கொண்டு இளம் விலங்கு போசணையைப் பெறும்.

⇒ உடல் மயிர்களால் மூடப்பட்டது. இது காவலியாக அமையும்.

⇒ இளஞ் சூட்டுக் குருதி வெப்பநிலைக்குரியவை. அனேகமானவை உயர் அனுசேப வீதம் உடையவை.

⇒ பல்லினப் பற்கள் கொண்டவை.

⇒ நுரையீரலுடன் கூடிய வினைத்திறனான சுவாசத் தொகுதி கொண்டவை.

⇒ முழுமையன சுற்றோட்டத் தொகுதி இதயம் நான்கு அறை கொண்டது.

⇒ சுவாசத்திற்கு உதவியாக தசை கொண்ட பிரிமென்தகடு காணப்படும்.

⇒ ஏனைய முள்ளந்தண்டுடைய விலங்குக் கூட்டங்களுடன் ஒப்பிடும் போது பெரிய மூளை கொண்டவை.

⇒ அதிக புத்திக்கூர்மை உடைய விலங்குகள்.

⇒ கற்றல் திறன்களும் சிறந்த ஞாபகசக்கியும் கொண்டவை.

⇒ வெவ்வேறு முறையினால் ஆன தொடர்பாடல் உடையவை.

⇒ நீண்டகால பெற்றோர் பராமரிப்பு தொடர்புகளைக் கொண்டவை.



வெளவால் Bat



திமிங்கிலம் Whales



மாடு Cow



குரங்கு Monkey

கணிப்பீடு

♦ முள்ளந்தண்டுளி விலங்குகளின் கூர்ப்புத் தொடர்புகளை பெறுக.



Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

தொகுப்பு :- திருமதி.A.தவரஞ்சித் ஆசிரியர் - உயிரியல் (யா/யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்)
கணினி வடிவமைப்பு :- திரு.வே.றமணன் ஆசிரியர் - தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் (கிளி/இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பா)
Copyright © www.e-thaksalawa.moe.gov.lk